**ரிமைத் துறப்பு:** இப்பதிப்பு மூல ஆங்கிலப் பதிப்பின் மொழிபெயர்ப்பாகும். இது தகவல் தரும் நோக்கத்திற்காக மட்டுமேயன்றி இதுவே பாலிசி ஒப்பந்தமாகக் கருதப்படுவதற்காக அல்ல. இதில் ஏதேனும் தவறுகள் காணப்பட்டால், மூல ஆங்கிலப் பதிப்பே நிலைபெறும். துல்லிய மொழிபெயர்ப்புக்காக நியாயமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், சில பகுதிகளில் பிழைகள் இருக்கலாம். இந்த மொழிபெயர்ப்பை சார்ந்திருப்பவர், அவரது சொந்தப்பொறுப்பில் இதை ஏற்றுக் கொள்கின்றார். இந்த மொழிபெயர்ப்பில் உள்ள ஏதேனும் பிழை, தவறவிடல் அல்லது தெளிவின்மை மற்றும் மொழிபெயர்ப்பைச் சார்ந்திருப்பதால் எழும் நட்டங்களுக்கு இன்கம் பொறுப்பேற்காது.

# தனிநபர் தரவுப் பாதுகாப்பு அறிக்கை

இந்தக் காப்பீட்டுத் திட்டத்தை விரும்பித் தேர்வு செய்வதன் மூலம், இன்கம் நிறுவன அந்தரங்கப் பாதுகாப்புக் கொள்கையில் விவரிக்கப்பட்டுள்ள முறையில் மற்றும் அதில் விவரிக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக, இன்கம் நிறுவனம், அவர்களது மூன்றாம் தரப்பு வழங்குனர்கள் மற்றும் இன்கம் நிறுவன அந்தரங்கப் பாதுகாப்புக் கொள்கையில் (www.income.com.sg/privacy-policy) குறிப்பிடப்பட்டுள்ள பிற தரப்புகள் ஆகியோரை, இக்காப்பீட்டுக் கொள்கை விண்ணப்பதைச் செயல்முறைப்படுத்த மற்றும் நிர்வகிக்க அல்லது மாற்றலைச் செய்ய, உங்களுக்கு நிதியாலோசனை வழங்க மற்றும்/அல்லது வர்த்தகப் பொருட்கள் அல்லது சேவைகளைப் பரிந்துரைக்க, இன்கம் நிறுவனத்துடன் உள்ள உங்களது பாலிசிகள் மற்றும் வாடிக்கையாளர் உறவை நிர்வகிக்க நீங்கள் நேரடியாக வழங்கிய மற்றும்/அல்லது Singtel மூலம் பெறப்பட்ட உங்களது தனிநபர் தரவுகளைச் சேகரிக்கவும், பயன்படுத்தவும் மற்றும் வெளிப்படுத்தவும் தாங்கள் ஒப்புதல் வழங்குகிறீர்கள்.

இன்கம் நிறுவனத்துடன் உள்ள தங்களது ஒப்புதலை விலக்கிக் கொள்ளுதல் மற்றும் அறிவித்தல் செய்யப்படாதவரையில், இங்கு தாங்கள் வழங்கும் ஒப்புதல் கூடுதலாக வழங்கப்படுவதேயன்றி, மேற்கூறப்பட்ட நோக்கங்களுக்காக முன்பு வழங்கிய ஒப்புதலை புறம் தள்ளுவதன்று.

தங்களது தனிநபர் தரவுகளை அணுக மற்றும் திருத்தம் செய்ய மற்றும் ஒப்புதலை விலக்கிக் கொள்வது உட்பட, கூடுதல் தகவல்களுக்குத் தயவுசெய்து இன்கம் நிறுவன அந்தரங்கப் பாதுகாப்புக் கொள்கையைப் பார்வையிடவும்.

**ரிமைத் துறப்பு:** இப்பதிப்பு மூல ஆங்கிலப் பதிப்பின் மொழிபெயர்ப்பாகும். இது தகவல் தரும் நோக்கத்திற்காக மட்டுமேயன்றி இதுவே பாலிசி ஒப்பந்தமாகக் கருதப்படுவதற்காக அல்ல. இதில் ஏதேனும் தவறுகள் காணப்பட்டால், மூல ஆங்கிலப் பதிப்பே நிலைபெறும். துல்லிய மொழிபெயர்ப்புக்காக நியாயமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், சில பகுதிகளில் பிழைகள் இருக்கலாம். இந்த மொழிபெயர்ப்பை சார்ந்திருப்பவர், அவரது சொந்தப்பொறுப்பில் இதை ஏற்றுக் கொள்கின்றார். இந்த மொழிபெயர்ப்பில் உள்ள ஏதேனும் பிழை, தவறவிடல் அல்லது தெளிவின்மை மற்றும் மொழிபெயர்ப்பைச் சார்ந்திருப்பதால் எழும் நட்டங்களுக்கு இன்கம் பொறுப்பேற்காது.

# 30-day Protect Data plan Free Cover பொருளின் சுருக்கஉரை

## பிரிமியம்கள்

இப்பாலிசியின் பிரிமியம்கள் Singtel Mobile Singapore Pte Ltd ('பாலிசிதாரர்) செலுத்தப்படுகிறது மேலும் NTUC இன்கம் இன்சூரன்ஸ் கோ-ஆபரேட்டிவ் லிமிடட் ('இன்கம்) நிறுவனம் பாலிசிதாரரால் நியமனம் பெற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு ('காப்பீட்டைப் பெற்ற நபர்') இக்குழு பாலிசியின் பலன்களை வழங்குகிறது.

## பொருளைப்பற்றிய தகவல்கள்

பாலிசி காலத்துக்குள் நிகழும் குறிப்பிட்ட நிகழ்வுகளுக்குக் காப்பீடு பெற்றவருக்கு 30 நாட்களுக்குக் காப்பீட்டுப் பாதுகாப்பு வழங்கும் விபத்து மற்றும் உடல்நலப் பாலிசி ஆகும். இதன் பாதுகாப்பின் கீழ் சில பலன்களைப் பெற இக்குறிப்பிட்ட நிகழ்வுகள் விபத்துகளால் ஏற்பட்டவையாக மட்டுமே இருக்கவேண்டுமே அன்றி உடல்நலக் குறைவு காரணமாக ஏற்பட்டு இருக்கக் கூடாது.

காப்பீட்டுத் தொகையை கீழுள்ள அட்டவணையில் வரையறுத்துள்ளபடி, ஷரத்துகள், நிபந்தனைகள், விலக்குகள் மற்றும் அதிகப்பட்சப் பலன் வரம்புகள் ஆகியவற்றைப் பொறுத்து இன்கம் நிறுவனம் வழங்கும்.

இப் பாலிசி மெடிஷேவ்-அங்கீகாரம் பெற்ற பாலிசி அல்ல.

## காப்பீட்டு அட்டவணை[1]

| பலன் | | அதிகப்பட்ச பலன் (S$) காப்பீடு பெற்ற ஒருவருக்கு |
|---|---|---|
| பிரிவு 1 | விபத்தில் மரணம் | $5,000 |
| பிரிவு 2 | நிரந்தர ஊனம் | $5,000 |
| பிரிவு 3 | ஒரு விபத்தின் காரணமாக 4 நாட்கள் அல்லது அதற்கு அதிகமாக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டதற்குப் பின்னர் தினசரி மருத்துவமனை வருமானம் (நாளொன்றுக்கு 60 நாட்கள் வரை ஒரு நிகழ்வுக்கு) | $20 |
| பிரிவு 4 | ஒரு விபத்து அல்லது நோயின் காரணமாக 4 நாட்கள் அல்லது அதற்கு அதிகமாக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டதற்குப் பின்னர் பெறும் கெட்வெல் பலன் ( ஒரு நிகழ்வுக்கு) | $50 + 1GB Singtel டேட்டா பூஸ்டர் |

| | | |
|---|---|---|
| பிரிவு 5 | ஒரு விபத்து அல்லது நோயின் காரணமாக 4 நாட்கள் அல்லது அதற்கு அதிகமாக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டதற்குப் பின்னர் வேலையை இழத்தல் | $3,000 |

[1]குறிப்பு: தயவுசெய்து பாலிசி காப்பீட்டு விவரங்களில் பாலிசி நிபந்தனைகளைப் பார்க்கவும்.

**பொருளின் முக்கிய சாராம்சங்கள்**

பின்வருவன இத்திட்டத்தின் பாலிசி ஒப்பந்தத்தில் காணப்படும் முக்கிய சாராம்சங்கள் ஆகும். இது ஒரு சுருக்கஉரை மட்டுமே, அசல் ஷரத்துகள் மற்றும் நிபந்தனைகளைப் பார்க்கும்படி காப்பீடு பெற்றவருக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. கூடுதல் விளக்கம் தேவைப்பட்டால், காப்பீடு பெற்றவர் தகுந்த ஆலோசகரிடம் ஆலோசனை பெறவேண்டும்.

1. **தகுதிஅம்சங்கள்**

இப்பாலிசியின் காப்பீடு இந்த நிலைகளில் காப்பீடு பெற்றவருக்குக் கிடைக்கும்:

- நீங்கள் சிங்கப்பூர் குடிமகன், சிங்கப்பூரில் நிரந்தரமாக வசிப்பவராக; அல்லது சிங்கப்பூரில் செல்லுபடியாக இருக்கும் வேலைவாய்ப்புக் கடப்பிதழ், பணி அனுமதி, நீண்டகாலத் தங்குதல் கடப்பிதழ் அல்லது மாணவர் கடப்பிதழ் போன்ற ஆவணங்களை வைத்துள்ளவராக இருந்தால்;
- காப்பீடு பெற்ற நபர் 16 முதல் 85 வயதுடையவர் என்றால்;
- காப்பீடு பெற்றவரின் காப்பீட்டு விண்ணப்பத்தை இன்கம் மற்றும் பாலிசிதாரர் முறையாக அங்கீகரித்திருந்தால்; மற்றும்
- இத்திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்றவருக்காக, பாலிசிதாரர் பிரிமியத்தை முழுமையாகச் செலுத்தியிருந்தால்.

2. **இரத்துப் பிரிவு**

**a** அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி அல்லது தொடர்பெண் மூலமாக 7 நாட்கள் கால அறிவிப்பு கொடுத்து இன்கம் நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்றவரின் காப்பீட்டுப் பாதுகாப்பை இரத்துச் செய்ய முடியும். கைமுறையாக, அஞ்சல், தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் இரத்து அறிவிப்பு கொடுக்கப்படும்போது, அதே நாளில் அதைப் பெற்றுக்கொண்டதாகக் கருதப்படும். சந்தேகம் தீர, காப்பீடு பெற்றவருக்கு இரத்து பற்றி அறிவிக்க இன்கம் நிறுவனத்துக்கு எந்தவிதக் கடப்பாடும் கிடையாது.

**b** இத்திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்றவரின் காப்பீட்டுப் பாதுகாப்பை இன்கம் நிறுவனத்துக்கு பாலிசிதாரர் எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்து இரத்துச் செய்ய முடியும். பாலிசிதாரரிடமிருந்து இன்கம் நிறுவனத்துக்குக் கிடைத்த இரத்து அறிவிப்பைப் பொறுத்து காப்பீடு இரத்தாகும் தேதி முடிவாகும்.

**c** இத்திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்றவரே காப்பீட்டுப் பாதுகாப்பை இன்கம் நிறுவனத்துக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்து இரத்துச் செய்ய முடியும். காப்பீடு பெற்றவரிடமிருந்து இன்கம் நிறுவனத்துக்குக் கிடைத்த இரத்து அறிவிப்பைப் பொறுத்து காப்பீடு இரத்தாகும் தேதி முடிவாகும்.

**d** குறைந்தபட்சம் 3 மாதங்கள் கால எழுத்துப்பூர்வ இரத்து அறிவிப்பு கொடுத்து இன்கம் அல்லது பாலிசிதாரர் பாலிசியை இரத்துச் செய்ய முடியும். காப்பீடு பெற்றவரின்

காப்பீட்டுக் காலம் முடியும் முன்பே இரத்து தேதி வந்துவிட்டால், அவர்களின் காப்பீடு காலாவதி தேதியன்று முடிவடைந்து விடும்.

3. **புதுப்பித்தல் நிபந்தனை**

இது ஒரு குறுகிய கால விபத்து மற்றும் உடல்நல பாலிசி மேலும் இதைப் புதுப்பிக்க வேண்டிய தேவை இன்கம் நிறுவனத்துக்கு இல்லை. இதை இரத்துச் செய்ய இன்கம் நிறுவனம் பாலிசிதாரருக்கு ஏழு நாட்கள் கால எழுத்துப்பூர்வ அறிவிப்புக் கொடுத்து இரத்து செய்யலாம்.

காப்பீடுப் பெற்றவரின் காப்பீட்டுக்குப் புதுப்பித்தல் கிடையாது. காப்பீடு பெற்றவர் புதுப்பிக்க விரும்பினால் தகுதி நிலைகளுக்குட்பட்டு அவர் மீண்டும் காப்பீடு பெற விண்ணப்பிக்கலாம்.

4. **மாற்றங்கள்**

பாலிசிதாரரின் ஒப்புதலுடன் இன்கம் பாலிசியில் மாற்றங்களைச் செய்யலாம். காப்பீடு பெற்றவரின் காப்பீட்டுக்காலம் முடியும் முன்பு பாலிசியில் மாற்றங்கள் செய்யப்பட்டால் அது நடப்பில் உள்ள காப்பீட்டைப் பாதிக்காது.

5. **கோரல்களின் நிபந்தனைகள்**

**a** இப்பாலிசியின் கீழ் ஏதேனும் நிகழ்வுக்குக் கோரல்களை எழுப்ப, பாலிசிதாரர் அதை இயன்றவரையில் விரைவாக 30 நாட்களுக்குள் இன்கம் நிறுவனத்துக்குத் தெரிவிக்க வேண்டும். கோரலை மறுக்கும் உரிமை இன்கம் நிறுவனத்துக்கு உண்டு மற்றும் நிகழ்வு நடந்த 30 நாட்களுக்குப் பின்னர் காப்பீடு பெற்றவர் அதைத் தெரிவித்தால், எந்தக் கோரலையும் செலுத்தும் பொறுப்பு இன்கம் நிறுவனத்துக்கு இல்லை.

**b** காப்பீடு பெற்றவர்:

i) மோசடி செய்யக் கூடாது;

ii) தெரிந்தே தவறான கோரளைச் செய்யக் கூடாது அல்லது மோசடியாகக் கோரலை மிகைப்படுத்தக் கூடாது;

iii) தவறான கோரல் என்று தெரிந்தே கோரலை ஆதரித்து ஏதேனும் வாக்குமூலம் தரக் கூடாது;

iv) மோசடியானது என்று தெரிந்தே ஒரு மோசடிசெய்த அல்லது தவறான ஆவணத்தை இன்கம் நிறுவனத்துக்கு அனுப்பக் கூடாது; அல்லது

v) காப்பீடு பெற்றவர் வேண்டுமென்றே அல்லது அறிந்தே ஏற்படுத்திய சேதம் அல்லது நட்டத்துக்கு ஈடு கோரல் செய்யக் கூடாது.

**c** கோரல்களுக்கு இன்கம் நிறுவனம் சிங்கப்பூர் செலாவணியில் பணம் வழங்கும்.

**d** கோரல்களை இன்கம் நிறுவனம் மதிப்பீடு செய்யுமுன்னர், காப்பீடு பெற்றவர் அல்லது அவரது சட்டப்பூர்வப் பிரதிநிதி, அனைத்து தகவல்கள், அறிக்கைகள், அசல் இன்வாய்சுகள் மற்றும் இரசீதுகள், சாட்சிகள், மருத்துவச் சான்றிதழ்கள், தேவைப்பட்டால் சத்தியப் பிரமாணம் மூலம் உறுதிப்படுத்திய (அந்நிய மொழியிலுள்ள ஆவணங்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் போன்றவை) ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் தகவல்களுக்கு, இன்கம் நிறுவனத்தைத் தொடர்பு கொள்ள பின்வரும் சேனல்களை நாடலாம்:

**(i)** www.income.com.sg/st_claim

**(ii)** pcc@income.com.sg

**(iii)** 6788 6616

6. **விலக்குகள்**

இத்திட்டத்தின் கீழ் சில நிலைமைகளில் இன்கம் எந்தப் பலன்களையும் வழங்காது. இவை பாலிசி நிபந்தனைகளில் விலக்குகள் எனக் காட்டப்பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றை, ஆனால் அவற்றோடு மட்டும் முடியாத விலக்குகளை பின்வரும் பட்டியல் உள்ளடக்குகிறது. பாலிசி நிபந்தனைகளில் கூறப்பட்டுள்ள விலக்குகளின் முழுப் பட்டியலை நீங்கள் www.income.com.sg/stb வலைத்தளப் பக்கத்தில் படித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

இத்திட்டத்தில் பின்வரும் நிலமைகளில் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்பட்ட சேதங்கள் அல்லது நட்டங்களுக்கு எழும் கோரல்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**a** அறிந்தே நிகழ்ந்த நிகழ்வு.

**b** காப்பீடு பெற்றவர் வேண்டுமென்றே தாமே காயம் ஏற்படுத்திக் கொள்ளுதல், புத்தி சுவாதீனத்துடன் அல்லது புத்தி சுவாதீனம் இல்லாமல் தற்கொலை செய்து கொள்ளுதல் அல்லது தற்கொலை முயற்சி, காப்பீடு பெற்றவரின் குற்றச் செயற்பாடு, கோபம் கொண்டு தாக்குதல், தம்மைத்தாமே ஆபத்தில் மாட்டிக் கொள்ளுதல் (பிற மனிதரின் உயிரைக் காப்பாற்றும் முயற்சி தவிர).

**c** மது அல்லது போதை மருந்துகளின் பாதிப்பு.

**d** கர்ப்பம், குழந்தைப்பேறு, கருக்கலைப்பு, கருச்சிதைவு, அல்லது இது போன்ற நிலமைகளில் ஏற்படும் மரணம்.

**e** மனநலப் பிரச்சினைகள் அல்லது புத்தி சுவாதீனம் இழத்தல்.

**f** பாலியல் தொற்று நோய்கள், ஹியூமன் இம்முனோ டெபிஷியன்சி வைரஸ் (HIV) அல்லது பிற HIV தொற்றுகள் AIDS உள்பட, அல்லது எவ்வகையிலும் இந்த வைரசின் மூலம் ஏற்பட்ட சடுதிமாற்ற வகைகள் அல்லது மாறிகளின் தொற்றுகள்.

**g** திட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்பே உள்ள மருத்துவ நிலமைகள் அல்லது உடலியல் பிரச்சினைகள்.

**h** ஒரு பயணியாக பயணிகள் விமானம் அல்லது உரிமம் பெற்ற, பயணிகள் பயணிக்கும் விமானம் தவிர, காப்பீடு பெற்றவர் மேற்கொள்ளும் பறத்தல் அல்லது வான் சாகசங்கள்.

**i** காப்பீடு பெற்றவர் பங்கேற்கும் வேகப்பந்தயப் போட்டி அல்லது ரேசிங் (தடகள ஓட்டம் தவிர)

**j** அபாயமான செயல்கள் அல்லது சாகச விளையாட்டுகளில் உள்ளடங்கும் குகைப் பயணம், இடர்பாதைப் பயணம், செங்குத்துப் பாறை ஏற்றம் (செயற்கையாக உருவாக்கப்பட்டவை தவிர) அல்லது கயிறுகள் கட்டி ஏறும் மலை ஏற்றம், நீரடி சுவாசக்கருவியுடன் செய்யும் நீர் மூழ்கி செயற்பாடுகள், ஸ்கை டைவிங் மலை முகட்டிலிருந்து குதித்தல், பங்கி ஜம்பிங், BASE (கட்டிடம், சமிக்கைக் கோபுரம், ஸ்பான், நிலம்) ஜம்பிங், பாராகிளைடிங், ஹாங்கிளைடிங், பாராசூட்டிங், நதியோட்ட ராஃப்டிங், டிராகன் போட் சவாரி, வேட்டையாடுதல், குதிரைச் சவாரி, போலோ, ஷோ ஜம்பிங், மலையில் பைக் சவாரி- இன்கம் எழுத்துப்பூர்வ ஒப்புதல் வழங்கியது தவிர, உரிமம் பெற்ற வழிகாட்டி அல்லது பயிற்சியாளரின் மேற்பார்வையில் தவிர விளையாடப்படும் பிற பொழுதுபோக்கு விளையாட்டுகள்: சிங்கப்பூருக்கு வெளியில் பங்கேற்கும் வெப்பவாயு பலூன் பயணம், பனிச்சறுக்கு அல்லது குளிர்கால விளையாட்டுகள், ஹைக்கிங் அல்லது டிரெக்கிங்.

**k** பயங்கரவாதம், போர், புரட்சி அல்லது அதைப்போன்ற நிகழ்வுகளின் விளைவுகள்.

**l** அணுஉலை எரிபொருள், தளவாடப்பொருட்கள் அல்லது கழிவுகள் ஆகியவற்றின் கதிரியக்கம் அல்லது சேதங்கள்.

**m** இத்திட்டத்தின் காப்பீட்டைப் பெற்றவர் காயங்களிலிருந்து பாதுகாக்கும் அல்லது கோரல்களைக் குறைக்கும் பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறுதல்.

**n** காப்பீடு பெற்றவர் ஏதேனும் கடற்படை, இராணுவ, விமானப்படைச் சேவைகளில் பங்கேற்றல் அல்லது சிவில் அல்லது இராணுவ அதிகாரிகளால் திட்டமிடப்பட்ட பயிற்சிகள் அல்லது தாக்குதல் செயற்பாடுகளில் பங்கேற்றல்.

**உரிமைத் துறப்பு**

நீங்கள் எம்மிடமிருந்து உங்களது உடல்நலக் காப்பீட்டு வழிகாட்டியின் நகலைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது www.income.com.sg வலைத்தளப் பக்கத்திலிருந்து பதிவிறக்கிக் கொள்ளலாம்.

இப்பொருள் சுருக்கஉரை காப்பீட்டு ஒப்பந்தத்தின் பகுதியல்ல. இது இத்திட்டப் பொருளின் அம்சங்களை சுருக்கமாக விளக்கும் உரை மட்டுமே; இது முழு ஒப்பந்தத்தையும் விளக்கும் ஆவணம் அல்ல. இதன் உள்ளடக்கம் இன்கம் நிறுவன காப்பீட்டுக் கவச நிபந்தனை நிகழ்வு வெளியீடுகளிலிருந்து மாறுபடலாம். தயவுசெய்து, துல்லியமான அம்சங்கள், நிபந்தனைகள், மற்றும் விலக்குகளை அறிய பாலிசி ஒப்பந்தத்தைப் படித்துப் பார்க்கவும். பாலிசிதாரராலும் இன்கம் நிறுவனத்தாலும் பாலிசி ஒப்பந்தத்தின் அம்சங்கள், நிபந்தனைகள் மற்றும் விலக்குகளை மட்டுமே அமல்படுத்த முடியும்.

நடப்பில் உள்ள விபத்து மற்றும் உடல்நல திட்டத்தைக் கைவிட்டுப் புதிய திட்டத்தை பதிலிடுதல் நியாயத்துக்குப் புறம்பானது. முன்கூட்டியே திட்டத்தை முடித்தல் மற்றும் புதிய திட்டத்தைப் பதிலிடுதல், அபராதம் அல்லது பலன்களைக் குறைப்பதை விளைவிக்கும்.

இத்திட்டம் சிங்கப்பூர் டெபாசிட் இன்சூரன்ஸ் கார்பரேஷன் (SDIC) நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் பாலிசி உரிமையாளர் திட்டத்தின் கீழ் பாதுகாப்புப் பெற்றுள்ளது. காப்பீடு தானாகவே செயல்படும், நீங்கள் ஏதும் செய்ய வேண்டியதில்லை. காப்பீட்டின் பலன்களின் வகைகள் மற்றும் காப்பீட்டின் வரம்புகள் ஆகியவற்றைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள, இன்கம் நிறுவனத்தைத் தொடர்புகொள்ள அல்லது GIA/LIA அல்லது SDIC வலைத்தளங்களைப் பார்வையிட தயவுசெய்து (www.gia.org.sg or www.lia.org.sg or www.sdic.org.sg) வலைத்தளங்களைப் பார்க்கவும்.